## மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ள 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

# அறிவுத் தளத்திற்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்படுவது திராவிட இயக்கம்!

## பன்னாட்டு புத்தகக்காட்சி நிறைவு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜன.21-**

**மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ள நடப்பாண்டில் 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளோம் என்றும் அறிவுத் தளத்திற்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுவது திராவிட இயக்கம் என்றும் பன்னாட்டு புத்தகக் காட்சி நிறைவு விழாவில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

**சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியின் நிறைவு விழா சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது :

“தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை ஏற்பாடு செய்துள்ள இந்த பன்னாட்டு புத்தகக் கண்காட்சி நிறைவு விழாவில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த ஆண்டு நான் பங்குகொள்ளும் இரண்டாவது புத்தகக் கண்காட்சி இது. நான் ஏற்கெனவே நந்தனத்தில் நடைபெற்று வரும் சென்னை புத்தகக் கண்காட்சியை இந்த மாதத் தொடக்கத்தில் தொடங்கி வைத்தேன்.

அது மட்டுமல்ல. சென்னை வர்த்தக மையத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு, அயலகத் தமிழர் மாநாடு ஆகியவற்றுக்குப் பிறகு நான் கலந்து கொள்ளும் மூன்றாவது அரசு நிகழ்ச்சி இது. இந்த கண்காட்சியில் பங்குகொள்ள 40க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் வந்திருக்கிறீர்கள்.

### எழுத்தையும் வாசிப்பையும் கொண்டாடும் தமிழ் இனம்!

புத்தாண்டு, பொங்கல் ஆகியவற்றைக் கொண்டாடும் நேரத்தில், எழுத்தையும் வாசிப்பையும் கொண்டாடும் ஒரு ஊர் இருக்கிறது என்றால், அது நம் சென்னை மாநகரம் தான். அப்படி ஓர் இனம் இருக்கிறது என்றால், அது நம் தமிழ் இனம்தான்.

மூன்று நாட்கள் நடைபெற்றுள்ள இந்த விழாவில், சென்னை மக்கள் மட்டுமல்லாது உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்துள்ள மக்களும் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

வெறும் புத்தகக் கண்காட்சியாக இந்த விழா நின்றுவிடாமல், அறிவுப் பரிமாற்றத்துக்கான மேடையாகவும் ஆரம்பத்தில் இருந்தே இது அமைந்து வந்திருக்கிறது.



மேலும் இந்த மூன்று நாட்களில் எண்ணற்ற பயிற்சி வகுப்புகள், விவாதங்கள், தொடர்புகொள்ளும் வாய்ப்புகள், கருத்தரங்குகள் ஆகியவையும் நடைபெற்றுள்ளன.

பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் தங்களது அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். சர்வதேச பதிப்பகச் சந்தையில் தற்போதுள்ள போக்குகள், வெற்றிகரமான வணிகத்துக்குத் தேவையான டிஜிட்டல் வழிமுறைகள், பன்னாட்டு பண்பாட்டுப் பரிமாற்றத்தைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான வழிகள் போன்ற தலைப்புகளில் இங்கே உரைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

தமிழை உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்லுதல், உலகை தமிழ் மொழியில் கொண்டு வருதல் என்ற பொருளிலும் இங்கே பயனுள்ள உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### மொழி பெயர்க்க ஊக்கத் தொகை!

இந்த புத்தகக் கண்காட்சி மூலமாக ‘மொழிபெயர்ப்பு நிதி உதவி’ என்ற திட்டம் ஒன்றை நமது தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ் நூல்களை பிற மொழிகளில் மொழிபெயர்க்க அரசே ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

இந்த மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளிநாடு மற்றும் தமிழ்நாடு பதிப்பகங்களுக்கு இடையே சென்ற ஆண்டு பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்து, 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. அதற்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இந்த புத்தகக் கண்காட்சி, ‘ரைட்டிங் ஃப்ரம் பாட்ஸ் டு பாட்ஸ்’ என்ற கருப்பொருளில் நடைபெற்றிருக்கிறது. சமீபத்தில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி அவர்கள், ‘கொரோனா: உடல் காத்தோம், உயிர் காத்தோம்’ என்ற தலைப்பில் எழுதிய புத்தகத்தை நான் வெளியிட்டேன்.

2021 ஆம் ஆண்டு நம் கழக அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது கொரோனா இரண்டாவது அலை உச்சத்தில் இருந்தது. அதை எப்படி கட்டுப்படுத்தி, அதிலிருந்து மக்களை எப்படிக் காத்தோம் என்பதை ஆவணப்படுத்தும் வகையில் அந்தப் புத்தகம் இருந்தது. அதே நிகழ்ச்சியில் அந்தப் புத்தகத்தின் ‘கொரோனா கிரானிக்கிள்ஸ்’ என்ற ஆங்கிலப் புதிப்பையும் வெளியிட்டேன். அந்தப் புத்தகம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் (ஆர்டிஃபீசியல் இன்டெலிஜென்ஸ் ஏ.ஐ.) உதவியோடு எழுதப்பட்டுள்ளது.

இதை ஏன் நான் இங்கு சொல்கிறேன் என்றால், நம்முடைய கழகமோ, நம் தொண்டர்களோ எப்போதுமே புதுமையை ஏற்றுக்கொள்ள தயங்கியது கிடையாது. ஏ.ஐ. உதவியுடன் எத்தனை பக்கம் வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் எழுதியதை ஒருமுறை மனிதர்கள் சரிபார்ப்பது அவசியம். அப்போது தான் அதில் மனித உணர்வு பிரதிபலிக்கும்.

### அறிவுத் தளத்திற்கு முன்னுரிமை!

பேசியும் எழுதியும் வளர்ந்த இயக்கம் நம் திராவிட இயக்கம். திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே எழுத்துக்கும் பேச்சுக்கும் வாசிப்புக்கும் முக்கியத்துவம் தருகின்ற இயக்கம். நீதிக்கட்சி காலம் தொடங்கி பெரியார், அண்ணா, கலைஞர், தற்போது நம் கழகத் தலைவர் முதலமைச்சர் காலம் வரை, எல்லோருமே இந்த இயக்கம் அறிவுத் தளத்தில் செயல்பட வேண்டுமென்று முன்னுரிமை கொடுத்து செயல்பட்டுக் கொண்டு வருகிறோம். அதற்காகப் பல திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

அண்ணா பிறந்த நாள் நூற்றாண்டின் போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். அது இன்று சென்னையின் மிக முக்கிய அடையாளங்களில் ஒன்றாக மாறியிருக்கிறது. அதேபோல கலைஞர் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு நமது முதலமைச்சர் அவர்கள், சுமார் 250 கோடி ரூபாய் செலவில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். இன்று அது மதுரையின் மிக முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக மாறியிருக்கிறது.

ஓர் அடையாளத்தை உருவாக்குவது பெரிய விஷயமல்ல. ஆனால் அது அறிவு சார்ந்த அடையாளமாக இருக்க வேண்டும். அதில் நம் முதலமைச்சர் அவர்கள் தெளிவாக உள்ளார்கள். அதனால்தான் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞர் அணி சார்பாக 234 தொகுதிகளிலும் ‘கலைஞர் நூலகம்’ தொடங்கச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து இன்று வரை 15 நூலகங்களை நாங்கள் தொடங்கி உள்ளோம். அதில் உள்ள 20 ஆயிரம் புத்தகங்கள் மூலம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

மேலும் என்னுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ‘கலைஞர் நடமாடும் நூலகம்’ ஒன்றையும் நாங்கள் தொடங்கி வைத்தோம்.

திராவிட இயக்கத் தலைவர்கள் ஒருகாலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளையும் நடத்தி இருக்கிறார்கள். பெரியார், அண்ணா ஆகியோர் எழுதாத எழுத்துகளே இல்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாளில் 2 இலட்சம் பக்கங்களை எழுதினார். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ‘உங்களில் ஒருவன்’ என்ற நூலை எழுதி இருக்கிறார். அது ‘ஒன் அமங் யூ’ என்று ஆங்கிலத்திலும் வெளியாகி உள்ளது.

### முரசொலியில் ‘பாசறை பக்கம்’

இன்று நான் இளைஞர் அணி செயலாளர் மட்டுமல்ல. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மட்டுமல்ல. நானும் ஒரு பதிப்பாளர். ஒரு புதிய பயணத்தை நாங்கள் தொடங்கி இருக்கிறோம். இளைஞர் அணி சார்பாக ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ என்ற பதிப்பகத்தைத் தொடங்கி உள்ளோம். திராவிட இயக்கத்தின் கருத்துகளை பட்டி தொட்டி எங்கும் கொண்டு சேர்க்க, முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளையாம் ‘முரசொலி’யில் ‘பாசறை பக்கம்’ என்றொரு பக்கத்தைக் கொண்டு வந்தோம்.

சென்ற ஆண்டு பொங்கல் நாளில் அந்தப் பக்கத்தை நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இன்றோடு அந்தப் பக்கம் தொடங்கி ஓராண்டு ஆகிறது. அந்தப் பக்கத்தில் வெளிவந்த தொடர்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு இந்த ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சிக்கு 9 புத்தகங்களாகக் கொண்டு வந்துள்ளோம். அவற்றையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் வெளியிட்டார்கள்.

> **பேசியும் எழுதியும் வளர்ந்த இயக்கம் நம் திராவிட இயக்கம். திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே எழுத்துக்கும் பேச்சுக்கும் வாசிப்புக்கும் முக்கியத்துவம் தருகின்ற இயக்கம். நீதிக்கட்சி காலம் தொடங்கி பெரியார், அண்ணா, கலைஞர், தற்போது நம் கழகத் தலைவர் முதலமைச்சர் காலம் வரை, எல்லோருமே இந்த இயக்கம் அறிவுத் தளத்தில் செயல்பட வேண்டுமென்று முன்னுரிமை கொடுத்து செயல்பட்டுக் கொண்டு வருகிறோம். அதற்காகப் பல திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.**

இதை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், இன்றைய புத்தகங்கள் தான் நாளை நம்முடைய வரலாற்றைச் சொல்லும். அதற்காகத்தான் இத்தனை நிகழ்ச்சிகள். அந்த வகையில் இன்று இந்த சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சியும் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. இதனை சிறப்பாக ஏற்பாடு செய்த பள்ளிக் கல்வித் துறைக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாடநூல் கழக நிர்வாக இயக்குநர் கஜலட்சுமி ஐ.ஏ.எஸ், மலேசிய தூதரக அதிகாரி சரவணகுமார், மலேசிய கல்வித்துறை இணை முதன்மை இயக்குநர் ஷஃப்ருதின் அலி உசேன், சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் ஆழி செந்தில்நாதன், எமரால்ட் பதிப்பகத்தின் பதிப்பாளர் ஒளிவண்ணன், கவிஞர் சல்மா, பபாசியின் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக பள்ளிக் கல்வித் துறை செயலர் ஜே.குமரகுருபரன் ஐ.ஏ.எஸ் வரவேற்புரையாற்றினார்.

பொது நூலகத்துறை இயக்குநர் கே.இளம்பகவத் ஐ.ஏ.எஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## ‘கேலோ இந்தியா’ விளையாட்டுப் போட்டி கோலாகலமாகத் துவங்கிய காட்சிகள்!













